**Pastoral letter No/GR/ 16/ 2014**

## ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

'மனித உரிமை கல்வி, மனித நேயம் கொண்ட உலகை உருவாக்குவதற்கான உடன்படிக்கை. நாம் சவால் விடுவதற்கும் மாற்றுவதற்குமான ஒரு உலகம். வெல்வதற்கும் கட்டுவதற்குமான மற்றொரு உலகம். மனித உரிமைக் கல்வி மனித உரிமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதி. அது "முடிவற்ற போராட்டம், அதில் இறுதி வெற்றி ஒரு போதும் அடையமுடியாது". ஆனால் அந்த போராட்டத்தில் தளர்ந்து விட்டால், சமுதாயமே அழிந்துவிடும்'. (ஐன்ஸ்டின்).

நமது மறைமாவட்டம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கில வழிப் பள்ளிக்கூடங்கள் வாயிலாக நமது பிள்ளைகளையும் மற்று பிள்ளைகளையும் ஒரு சிறந்த குறிப்பிட்ட நிலைக்கு உயர்த்திக் கொண்டிருக்கின்றது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் நமது மறைமாவட்டத்தில் நமக்கென்று ஒரு உயர்கல்வி நிறுவனம் வெண்டும் என்பது நமது பல வருட கனவு என்பது மட்டுமல்ல, இது இந்நாள் தேவையும்கூட. இதை மனதிற் கொண்டு நம் அருட்தந்தையர்கள் மற்றும் பொது நிலையினர் மத்தியிலிருந்தும் தெரிந தெடுக்கப்பட்ட ஒரு குழுவினர்(Committee) இதற்காக நன்கு உழைத்து, விவாதித்து திட்டமிட்டு அறிக்கை யொன்றை என்னிடம் சமர்ப்பித்தனர். பின் அவ்வறிக்கை கூரியாவில் விவாதிக்கப்பட்டு தக்கலை மறைமாவட்டத்திற் கென்று ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க தீர்மானிக்கப்பட்டது. காரணம் குமரிமாவட்ட மாணவர்களிடையெ தற்பொது கலை மற்றும் அறிவியல் கல்லூரி தான் அதிக வரவெற்பை பெற்றுள்ளது.

இதற்காக சூசைபுரத்தில் மறைமாவட்டத்திற்கான நிலம், இக்கல்லூரிக்காக ஒதுக்கப்பட்டு அடிப்படை வெலைகள் துவங்கப்பட்டன. கல்லூரிக்கான அனுமதி வெண்டு கோள் சென்னைக்கு அனுப்பப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கான அனுமதிக்காக காத்திருக்கிறொம்.

இக்கல்லூரிக்கு '**புனித அல்பொன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இது நம் மறைமாவட்டத்தின் கல்லூரி, இதில் உங்கள் ஆதரவும் பங்களிப்பும் இருக்க வெண்டும் என்பதை உணர்த்தும் வண்ணம் 5 பேர் அடங்கிய குழு ஒன்றை உங்களிடையே அனுப்புகிறேன். இவர்கள், நாம் துவங்கப் போகும் கல்லூரி பற்றியும், அதில் மறைமாவட்ட மக்களாகிய உங்களின் பங்களிப்பு பற்றியும் உங்களிடம் பேசுவார்கள். அதோடு உங்களுடைய கருத்துகளையும் அவர்கள் கேட்டறிந்து பதிவு செய்வார்கள்.

இக்கூட்டமானது, ஒவ்வொரு மறைவட்ட அளவிலும் கீழ்கண்ட நாட்களில் நடைபெறும், இதில், எல்லா பங்குகளிலிருந்தும் பங்கு பிரதிநிதி மன்ற உறுப்பினர்கள் பங்கு தந்தையுடன் இணைந்து தவறாமல் கலந்து கொள்ளவும்.

படந்தாலுமூடு மறைவட்டம் - மார்ச 9 மதியம் 2 மணி

நித்திரவிளை மறைவட்டம் - மார்ச் 9 மாலை 5 மணி
மஞ்சாலுமூடு மறைவட்டம் - மார்ச் 16 மதியம் 2 மணி
ஆறுகாணி மறைவட்டம் - மார்ச் 16 மாலை 5 மணி
சூசைபுரம் மறைவட்டம் - மார்ச் 23 மதியம் 2 மணி
தக்கலை பிலாங்காலை மறைவட்டம் - மார்ச் 23 மாலை 5 மணி

**உங்களை சந்திக்க வருகின்ற குழு**

அருட்தந்தை டோம் குன்னம்புறம் - கல்விக் குழு
அருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் - நிர்வாகக் குழு
அருட்தந்தை ஜியோ குழிக்குந்நேல் - நிதிக் குழு
திரு. சவுந்தா் ராஜ் - நிதிக் குழு
திரு. சுகுமாரன் - நிதிக் குழு

**கல்லூரரிக்காக அமைக்கப்பட்ட Committe உறுப்பினர்கள்**

**பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம்** - குருகுல முதல்வர்
பேரருட்தந்தை டோம் குன்னம்புறம் - முன்னாள் முதல்வா் S.B.கல்லூரி சங்கனாசேரி
ரெக்டர், இளங்குருமடம், முக்கூட்டுக்கல்
பேரருட்தந்தை கிறிஸ்து தாஸ் --- தாளாளா், தமிழ் பள்ளிகள் கூட்டமைப்பு
தக்கலை மறைமாவட்டம்.

அருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் - பங்குதந்தை, தாளாளா்
அல்போன்சா மேல்நிலைப்பள்ளி, நாகா்கோயில்.
அருட்தந்தை ஆன்றணி ஜோஸ் - தாளாளா்,
A.P.J.M. மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி,
சூசைபுரம்
அருட்தந்தை ஜியோ சூழிக்குந்நேல் - பங்குதந்தை, கிள்ளியூா்
திரு. ஆகஸ்டின் தறப்பேல் - மேனேஜிங் டைரக்டா், Bros பாா்மா
திரு. ஜஸ்டினா் ராஜ் - வழக்கறிஞா், நாகா்கோவில்
திரு.ராஜையன் - பேராசிரியா், நாகா்கோவில்
திரு. சுகுமாரன் -வயலின் கரை
திரு. சவுந்தா் ராஜ் - முழுக்கோடு
அருட்சகோதரி விஜி - CMCவட்டார தலைவி , தக்கலை
அருட்சகோதரி ரோஸ் கானாசேரி - SABSவட்டார தலைவி, சூசைபுரம்

நமது உயா்கல்வி நிறுவனக் கனவு விரைவில் நனவாக நாமனைவரும் ஒன்றிணைந்து செபிப்போம். உங்களுக்காக ஜெபிப்பதோடு, இக்குடும்ப ஆண்டில் கடவுளின் ஆசீயையும் நான் வேண்டுகிறேன்.

**மாா் ஜாா்ஜ் இராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயா்

(இச்சுற்றுமடலை வருகிற மாா்ச் மாதம் 2- ம் தியதி திருப்பலிக்கு பின் வாசிக்கவும்)